**Election urgent**

## Tamil Nadu State Cooperative Societies Election Commission

**From**
**Thiru. M.R. Mohan, I.A.S., (Retd.)**
**Commissioner,**
**Tamilnadu State Cooperative Societies**
**Election Commission,**
**273, Anna Salai, Teynampet, Chennai-18.**

**To**
**The State Election Officers**

**Rc.No. 468/2013/CE-5 Dated: 10.04.2013**

Sir,

Sub : Election – Conduct of Election of Members of the Boards and Office Bearers of Co-operative Societies in the State – Education and Training of voters – Issue of Poster – Regarding.

Ref : Commission letters of even no dated 01.04.2013.

*****

It is learnt that after the counting for Stage-I – Phase – I, is over, the voters are not well informed or aware as how to cast their votes in the matter of election of the members to the board of their respective society.

Though the Commission has already arranged for the publication of two posters to educate the voters, it is felt that the same has not reached the target audience in full measure.

The Commission, now therefore, reiterates that all voters have to be well informed and enlightened as to how to cast their votes correctly.

The model poster now enclosed, may be arranged to be printed and displayed at the societies and also at prominent public places and government offices where people are expected to gather in large number.

The pamphlet enclosed may also arranged to be supplied to the contesting candidates along with the Hand Book for candidates (வேட்பாளர்கள் கையேடு) already brought out by the Commission.

The Commission may be informed of the compliance.

**Sd./- xxx**
**Commissioner**

**Copy to :**

1. All Observers.
2. District Election Officers.
3. The Secretary to Government,
   Cooperation, Food and Consumer
   Protection Department,
   Secretariat, Chennai – 600 009.

## கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்தல் – 2013

## வேட்பாளர்களுக்கு வேண்டுகோள்

******

நடைபெற இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினராவதற்கு போட்டியிடும் வேட்பாளர்களில் நீங்களும் ஒருவர்.

ஆணையத்தினால் உங்களுக்காக வெளியிடப்பட்டுள்ள “வேட்பாளர் கையேடு” உங்களிடம் இருக்கிறதல்லவா? அக்கையேடு உங்களுக்கு இத்தேர்தலைப்பற்றி நன்கு அறிந்திட உதவும்.

நீங்கள் மட்டுமல்ல, உங்களது வெற்றிக்காக வாக்களிக்கக் காத்திருக்கும் வாக்காளர்களும் அவர்களது பங்கினைப்பற்றி தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

அதில் மிகமிக முக்கியமானது அவர்கள் உங்களுக்கு அளிக்கும் வாக்குகள் அனைத்தும் செல்லத்தக்கதாக இருப்பது.

வாக்காளர்கள் அளிக்கும் வாக்குகள் எப்போது செல்லாததாகிறது (invalid) என்பதை நீங்கள் மட்டுமல்ல, உங்களுக்காக வாக்களிக்கக் காத்திருக்கும் வாக்காளரும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமல்லவா?

எப்போது ஒரு வாக்குச்சீட்டு செல்லாததாகின்றது?

(1) பெண்கள் / ஆதிதிராவிடர் - பழங்குடியினர் / பொது ஆகிய மூன்று **பிரிவுகளில் எந்த ஒரு பிரிவிலும்**, தேந்தெடுக்கப்பட வேண்டிய நபர்களைவிட கூடுதலான நபர்களுக்கு வாக்களித்து இருந்தால்;

(2) வாக்காளர் அடையாளம் தெரியும் வகையில் ஏதாவது குறியீடு அல்லது எழுத்து இருந்தால்;

(3) அதில் வாக்கு ஏதும் பதிவு செய்யப்படாமலிருந்தால்;

(4) தேர்தல் அலுவலராலோ, அல்லது வாக்குச்சாவடி அலுவலராலோ வழங்கப்படாத வேறு ஒரு வாக்குச் சீட்டாக இருந்தால்;

(5) எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகம் தரும் முறையில் முத்திரையிடப்பட்டிருந்தால்;

(6) தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இல்லாதிருந்தால்;

(7) உண்மையான (genuine) வாக்குச் சீட்டுதானா என்று அறிய முடியாத அளவிற்கு சிதைந்தோ, சேதமடைந்தோ இருந்தால்;

(8) தொடர்புடைய (relevant) வாக்குச் சீட்டாக இல்லாதிருந்தால்.

எனவே, நீங்கள் மட்டுமல்ல, உங்களுடைய வாக்காளர்களும் இதனை அவசியம் அறிந்திட வேண்டும்.

அவர்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் வெற்றிக்கு மிக முக்கியமானது.

எனவே மதிப்புமிக்க அவ்வாக்குச் சீட்டு மதிப்பிழந்தால் மன வருத்தம் தருமல்லவா?

முறையாக வாக்களிக்கத் தெரிந்திடுங்கள்!
வாக்காளருக்கும் தெரிவித்திடுங்கள் ! !

<u>வெளியீடு:</u>

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்.

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

தேர்தல் – 2013

உங்கள் வாக்குச்சீட்டு

மிக மதிப்பு மிக்கது ! அதனை சரியாகப்பயன்படுத்துங்கள்!

எப்போது ஒரு வாக்குச்சீட்டு செல்லாததாகிறது?

உங்கள் வாக்கு சீட்டில்

(1) பெண்கள் / ஆதிதிராவிடர் - பழங்குடியினர்/ பொது ஆகிய மூன்று பிரிவுகளில் எந்த ஒரு பிரிவிலும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நபர்களை விட கூடுதலான நபர்களுக்கு வாக்களித்திருந்தால்;

(2) உங்கள் அடையாளம் தெரியும்படி குறிப்பு ஏதும் இருந்தால்;

(3) எந்த வரிசை எண்ணுக்கு முத்திரை இடப்பட்டுள்ளது என்று தெளிவாகக் காணும் வகையில் உங்களது முத்திரை இல்லாதிருந்தால்;

-உங்கள் மதிப்பு மிக்க வாக்கு செல்லாததாகும்!

வாக்குச்சீட்டினை சரியாகப் பயன்படுத்துவீர்!

விரும்பும் நபரைத் தேர்ந்தெடுப்பீர்!!

இன்ப வாழ்விற்கு  இணைந்த கரங்கள்!

வெளியீடு:

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்தேர்தல் ஆணையம்